**செய்தி வெளியீடு எண் : 095** **நாள்:13.01.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

**இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதைக் கடந்து ஓய்வு பெற்ற கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத்தை ரூ.3000/- ல் இருந்து ரூ.4000/- ஆகவும், இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஓதுவார்கள், அர்ச்சகர்கள், இசைக்கலைஞர்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்வியபிரபந்தம் பாடுவோர், மற்றும் அர்ச்சகர்களுக்கு ஓய்வூதியத்தை ரூ.1000/-லிருந்து ரூ.3000/- ஆகவும் உயர்த்தி வழங்கும் திட்டம் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

-------

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (13.1.2022) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதைக் கடந்து ஓய்வு பெற்ற கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத்தை 3000 ரூபாயிலிருந்து ரூ.4000/- ஆகவும், இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஓதுவார்கள், அர்ச்சகர்கள், இசைக்கலைஞர்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்வியபிரபந்தம் பாடுவோர், மற்றும் அர்ச்சகர்களுக்கு ஓய்வூதியத்தை 1000 ரூபாயிலிருந்து ரூ.3000/-ஆகவும் உயர்த்தி, உயர்த்தப்பட்ட ஓய்வூதியத் தொகையை 10 பயனாளிகளுக்கு வழங்கினார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் 2021-22ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதைக் கடந்து ஓய்வு பெற்ற கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத்தை 3000 ரூபாயிலிருந்து ரூ.4000/- ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதை கடந்து ஓய்வுப்பெற்ற கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதிய திட்டம் 1996ல் தொடங்கப்பட்டு அரசு

நிதியாக ரூ.500/- வீதம் 1500 பூசாரிகளுக்கு வழங்கிட உத்தரவிடப்பட்டது. மேற்படி தொகையானது படிப்படியாக உயர்த்தப்பட்டு 2020-ல் ரூ.3000/-ஆக வழங்கப்பட்டு வந்தது. விலைவாசி உயர்வினையும், வாழ்வாதாரத்தையும் கருணையுடன் பரிசீலித்து ஓய்வு பெற்ற கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியம் ரூ.4000/- மாக உயர்த்தி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு முழுவதும் 1804 கிராமப்புற பூசாரிகள் பயன்பெறுகின்றனர்.

இதேபோன்று, இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஓதுவார்கள், அர்ச்சகர்கள், இசைக்கலைஞர்கள், வேதபாராயணர்கள், திவ்வியபிரபந்தம் பாடுவோர் மற்றும் அரையர்களுக்கு 1988ஆம் ஆண்டு மாதம் ரூ.250/- ஓய்வூதியம் அரசு நிதியாக வழங்க ஆணையிடப்பட்டு படிப்படியாக உயர்த்தப்பட்டு 2011ஆம் ஆண்டில் ரூ.1000/- ஆக வழங்கப்பட்டதை தற்போது அவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு ரூ.3000/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 100 ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுகின்றனர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், இ.ஆ.ப., இந்துசமய அறநிலையத் துறை ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

................

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**